بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *06/12/2024* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் பின்னணியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹுதைபியா சமாதான உடன்படிக்கை பற்றிய குறிப்பில் இன்று மேற்கொண்டு சில விபரங்களை எடுத்துக் கூறுவேன். சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) இவ்வாறு எழுதுகிறார்கள்:

ஒப்பந்தங்களில் சில குறைபாடுகளும் இருந்து விடுவதுண்டு. அவை சில சமயங்களில் மிக முக்கியமான விளைவுகளுக்கும் காரணமாக அமைந்து விடுகின்றன. ஹுதைபியா சமாதான உடன்படிக்கையிலும் ஒரு குறைபாடு இருந்தது. அது என்னவென்றால், முஸ்லிம் ஆண்கள் திரும்பிச் செல்வது குறித்து தெளிவாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் முஸ்லிம் பெண்களைப் பற்றி எவ்வித குறிப்பும் இடம்பெறவில்லை. இந்த ஒப்பந்தம் ஏற்பட்டு கொஞ்ச காலம்தான் கடந்திருக்கும்; சில முஸ்லிம் பெண்கள் மக்கத்து காஃபிர்களின் கையிலிருந்து தப்பி மதீனா வந்தடைந்தார்கள். அவர்களில் முதலாவதாக உம்மு குல்ஸூம் அவர்கள் வந்தடைந்தார்கள். இவர்கள் மக்காவைச் சார்ந்த உக்பா பின் அபீ முஅய்த் எனும் மரணமடைந்திருந்த ஒரு முஷ்ரிக் தலைவரின் மகள் ஆக இருந்தார்கள். மேலும், இவர்கள் தம் தாய் வழி முறைப்படி ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களின் சகோதரியாகவும் இருந்தார்கள். உம்மு குல்ஸூம் அவர்கள் மிக துணிச்சலுடன் இவ்வளவு நீண்ட பயணத்தை நடந்தே கடந்து மதீனா வந்தடைந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி தாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை வெளிப்படுத்தினார்கள். இவர்களுக்கு பின்னாலேயே இவர்களின் இரு காஃபிர் உறவினர்களும் இவர்களைப் பிடிப்பதற்காக வந்து சேர்ந்தார்கள். இவர்களை திரும்ப அனுப்ப வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள்.

அவர்களின் வாதம் என்னவாக இருந்தது என்றால், உடன்படிக்கையில் ஆண்கள் எனும் சொல் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் உண்மையில் அந்த உடன்படிக்கை பொதுவானதாக உள்ளது. ஆண்கள் பெண்கள் இருவரையும் குறிக்கும் என்றார்கள். ஆனால் உம்மு குல்ஸூம் அவர்களின் வாதம் என்னவாக இருந்தது என்றால், உடன்படிக்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் மூலம் நிரூபணமாவது மட்டுமின்றி, பெண் என்பவள் ஒரு பலவீனமான படைப்பு ஆவாள். ஆகவே தம்மை திரும்பி அனுப்பி வைப்பது ஆன்மிக மரணத்தின் வாய்க்குள் தள்ளி விடுவதற்கும், இஸ்லாத்தை விட்டு இழப்பிற்குரியவளாக ஆக்குவதற்கும் சமமாகும் என்று கூறி திரும்பச் செல்ல மறுத்தார்கள்.

ஆகவே அந்த உடன்படிக்கையில் பெண்களை விதிவிலக்காக கருதுவது உடன்படிக்கைக்கு (முற்றிலும்) உட்பட்டது மட்டுமின்றி அறிவுபூர்வமாகவும், நீதியின் அடிப்படையிலும் அவசியமானதாக இருந்தது. எனவே, நியாயமான முறையிலும் நீதியின்

அடிப்படையில் பெருமானார் (ஸல்) அவர்கள் உம்மு குல்ஸூம் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பைக் கூறி அவர்களின் உறவினர்களை திருப்பி அனுப்பி விட்டார்கள். அந்நாட்களில் திருக்குர்ஆன் வசனம் ஒன்று இறங்கியது. அதன் பொருள் என்னவென்றால்,

“ஒரு பெண் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்தவாறு மதீனாவுக்கு வந்தாள் அவளை நன்கு பரிசோதித்துக் கொள்ளுங்கள். அவள் நல்லியல்பு கொண்டவள் என்றால், கலப்பற்றவளாக நிரூபணம் ஆனாள் அவளை காஃபிர்களின் பக்கம் ஒருபோதும் திருப்பி அனுப்ப வேண்டாம். ஆனால் அவள் மணம் முடித்தவளாக இருந்தால் அவளுடைய மஹரை அவளின் முஷ்ரிக் கணவனுக்கு கண்டிப்பாக செலுத்தி விடுங்கள்.”

ஹுதைபியா உடன்படிக்கையில் இருந்த ஒரு நிபந்தனை என்னவென்றால், மக்காவில் உள்ள ஒருவர் முஸ்லிமாகி மதீனாவுக்கு வந்துவிட்டால் மதீனா மக்கள் அவருக்கு புகலிடம் கொடுக்கக் கூடாது; அவரை திருப்பி அனுப்ப வேண்டும். ஆனால் ஒரு முஸ்லிம் இஸ்லாத்தை விட்டு விலகி மதீனாவில் இருந்து மக்காவுக்கு சென்றால் மக்காவாசிகள் அவரை திரும்ப அனுப்ப மாட்டார்கள்.

இந்த நிபந்தனை மூலமாக முஸ்லிம்களுக்கு அவமதிப்பு ஏற்பட்டதாக வெளிப்படையாக கருத்தப்பட்டது. ஆனால் வெகுவிரைவிலேயே சூழ்நிலை எப்படி மாறியது என்றால் அந்த நிபந்தனை குரைஷியர்களுக்கு பலவீனத்தையும் முஸ்லிம்களுக்கு வலிமையையும் தருவதற்கு காரணமாக அமைந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஆரம்பத்திலே கூறிவிட்டார்கள். அதாவது, ‘ஒரு முஸ்லிம் வெறுப்படைந்து மதீனாவை விட்டு செல்கிறார் என்றால் அப்படிப்பட்ட முனாஃபிக்கை, அசுத்தமான அங்கத்தை மதீனாவுக்கு அழைத்து வரவேண்டிய எந்த அவசியமும் கிடையாது!’

உடன்படிக்கை ஏற்பட்டு அதிக காலம் கூட ஆகியிருக்காது; அபூ பஸீர் எனும் மக்காவாசி முஸ்லிமாகி மதீனா வந்தடைந்தார். உடன்படிக்கையின் நிபந்தனைக்கேற்ப காஃபிர்கள் கோரிக்கை வைத்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் அபூ பஸீர் அவர்களை காஃபிர்களுடன் அனுப்பி வைத்து விட்டார்கள்.

அந்தக்குழு அபூ பஸீர் அவர்களை அழைத்துக் கொண்டு மக்கா செல்லும் போது அபூ பஸீர் அவர்கள் சந்தர்ப்பம் பார்த்து அந்த குழுவின் தலைவனாக இருந்தவனைக் கொன்று விட்டார்கள். இன்னொருவனையும் கொல்ல நெருங்கி விட்டார்கள். ஆனால் அவன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு அபூ பஸீர் அவர்களுக்கு முன்பே மதீனா சென்றடைந்து விட்டான். அவனுக்கு பின்னாலே அபூபசீர் அவர்களும் கையில் வாளேந்தியவாறு அங்கு வந்தடைந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் என்னை காஃபிர்களின் கையில் ஒப்படைத்து விட்டீர்கள். இவ்வாறு தங்களுடைய பொறுப்பு முடிந்துவிட்டது. ஆனால் இறைவன் அநியாயக்கார சமுதாயத்தில் இருந்து எனக்கு இரட்சிப்பை வழங்கி விட்டான் என்று கூறியபோது பெருமானார் (ஸல்) அவர்கள், இவரோ போர் நெருப்பை மூட்டுகிறாரே! என்று கூறினார்கள்.

அபூ பஸீர் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த சொற்களைக் கேட்டபோது பெருமானார் (ஸல்) அவர்கள் தம்மை இப்பொழுது மறுபடியும் மக்காவாசிகளிடம் திருப்பி அனுப்பி வைத்து விடுவார்கள் என்று புரிந்து கொண்டார். ஆகவே அவர் ஒளிந்து மறைந்து அங்கிருந்து புறப்பட்டார். அவர் மக்காவுக்கு செல்லாமல் தனியாக ஒரு புகலிடத்தை உருவாக்கிக் கொண்டார். மக்காவில் இருந்த பலவீனமான முஸ்லிம்களுக்கும் இது தெரிய வந்தபோது அவர்களும் கொஞ்சம் கொஞ்சமாக மக்காவிலிருந்து வெளியேறி அங்கு வந்தடைந்தார்கள். அவ்வாறு வந்தவர்களுள் மக்கத்து தலைவர்களுள் ஒருவரான சுஹைல் பின் அம்ர் அவர்களின் மகன் அபூ ஜந்தலும் ஒருவர் ஆவார்கள்.

இவ்வாறு வந்தடைந்த மக்களின் எண்ணிக்கை 70 என்று கூறப்படுகின்றது. சில அறிவிப்புகளில் 300 என்றும் கூறப்படுகின்றது. இவ்வாறு மதீனாவைத்தவிர இன்னோர் இஸ்லாமிய அரசும் உருவாகிவிட்டது. இப்பகுதி சிரியா செல்லும் வழியில் இருந்ததால் இவர்களுக்கும் மக்கத்து காஃபிர்களுக்குமிடையில் மோதல் ஏற்பட ஆரம்பித்தது. இந்த புதிய போர் குரைஷியர்களுக்கு பெரும் அபாயத்தை உருவாக்கியது. ஆகவே, நெருக்கடிக்கு ஆளாகி பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் தூதுவரை அனுப்பி, இந்த முஹாஜிர் முஸ்லிம்களை மதீனாவுக்கு அழைத்து இணைத்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் வைத்தார்கள். அத்துடன், மக்காவிலிருந்து தப்பி மதீனாவுக்கு வரக்கூடிய புதிய முஸ்லிம்களுக்கு புகலிடம் கொடுக்கக்கூடாது என்று எழுதப்பட்டிருந்த ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் நிபந்தனையை அவர்களாகவே ரத்து செய்துவிட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அபூ பசீர் மற்றும் அபூ ஜந்தல் ஆகியோருக்கு ஒரு கடிதம் மூலமாக செய்தி அனுப்பி அவர்களை மதீனா அழைத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் தூதுவர் அங்கு சென்றபோது அபூபசீர் அவர்கள் உடல் நலம் குன்றி படுத்த படுக்கையாக இருந்தார்கள். அபூ பஸீர் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய கடிதத்தை மிக ஆர்வத்துடன் தம் கையில் வாங்கி வைத்துக் கொண்டார்கள். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அந்நிலையிலேயே உயிரை விட்டார்கள். மற்ற முஸ்லிம்கள் மதீனா வந்தடைந்தார்கள்.

முஸ்லிம் அல்லாத கிழக்கத்திய வரலாற்றாசியர்கள் ஹுதைபியா சமாதான உடன்படிக்கை தொடர்பாகவும் வழக்கம்போல் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்துள்ளார்கள். அவர்களின் இரு கவனிக்கத்தக்க ஆட்சேபனைகளைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்: முதல் ஆட்சேபனை, பெருமானார் (ஸல்) அவர்கள் பெண்களை மக்காவுக்கு திருப்பி அனுப்பாமல் ஒப்பந்தத்தை மீறினார்கள் என்று கூறப்படுவது ஆகும். இரண்டாவது ஆட்சேபனை, அபூபசீர் அவர்களின் சம்பவம் ஆகும்.

இந்த ஆட்சேபனைகளுக்கான பதில் தொடர்பாக நினைவில் வைக்க வேண்டிய முதல் விஷயம் என்னவென்றால், இந்த உடன்படிக்கை மக்கத்து குரைஷியர்களுடன் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்பம் முதலேயே பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக மும்முரமாக செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் அவர்கள் அறிந்திருந்தார்கள். மிகவும் விளக்கமாக அவர்கள் நிபந்தனை வகுத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஒப்பந்தத்தை மீறினார்கள் என்று அவர்கள் ஒருபோதும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

ஹுதைபியா சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ரோமானிய கைஸர் மன்னர் ஹெராக்கிலியஸ் -க்கு தப்லீக் கடிதம் எழுதியபோது அந்நேரத்தில் மக்கத்து தலைவரான அபூ சுஃப்யான் அவர்களும் தற்செயலாக சிரியாவுக்கு சென்றிருந்தார். மன்னர் அவரை தம் அரசவைக்கு வரவழைத்து பெருமானார் (ஸல்) அவர்களைக் குறித்து சில கேள்விகளைக் கேட்டார். அதில் ஒரு கேள்வி, உம் சமுதாயத்தின் அந்த நபித்துவவாதி எப்போதாவது ஏதேனும் வாக்குறுதியை மீறியிருக்கிறாரா? என்பதும் ஆகும். நிராகரிப்பவர்களுக்கு தலைவராகவும், இஸ்லாதின் கடும் எதிரியாகவும் இருந்த அபூ சுஃப்யான் அவர்கள் இந்தக் கேள்விக்கு பதிலளிக்கும் போது, முஹம்மது (ஸல்) அவர்கள் எப்போதும் உடன்படிக்கையை மீறியது கிடையாது என்றே கூறினார்கள்.

பிறகு இந்த ஆட்சேபனைகளின் விளக்கத்திற்குள் நாம் செல்வோம் என்றால் இந்த ஆட்சேபனைகளில் இருக்கும் பலவீனம் இன்னும் அதிகமான அளவில் அதில் தென்படுவதை காண முடிகிறது. உதாரணமாக முதல் ஆட்சேபனை என்னவென்றால், ஆணும் பெண்ணும் இருவருமே அந்த உடன்படிக்கையின் சொற்களுக்கு உட்பட்டவர்கள்

என்றும் ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் கட்டாயப்படுத்தி பெண்களை விதிவிலக்காக ஆக்கி விட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

நாம் ஏற்கனவே கூறியது போன்று இந்த ஆட்சேபனை முற்றிலும் தவறானதும் அடிப்படையற்றதும் ஆகும். ஏனென்றால் சரியான அறிவிப்புகளில் எடுத்துரைக்கப்பட்ட உடன்படிக்கையின் சொற்கள் மிகத்தெளிவாக கூறுவதென்னவென்றால், நிபந்தனையின் சொற்கள் ஆண்களை மட்டுமே குறிக்குமேயன்றி ஆண்கள் பெண்கள் இருவரையும் குறிக்காது. ஸஹீஹ் புகாரியில் உடன்படிக்கையின் சொற்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அதில் இவ்வாறு வருகிறது;

'எங்களில் இருந்து எந்தவோர் ஆணும் உங்களிடம் வந்தாலும் அவர் முஸ்லிமாக இருந்தாலும் நீங்கள் அவரை எங்கள் பக்கம் திருப்பி அனுப்பி வைக்க வேண்டும்.'

இவ்வாறு தெளிவாகவும் சந்தேகத்திற்கிடமின்றியும் சொற்கள் இருந்தும்கூட உடன்படிக்கையில் எழுதப்பட்ட சொல் ஆண், பெண் இருவரையும் குறிக்கும் என்று ஆட்சேபனை செய்வது அநீதி மட்டுமின்றி மிக இழிவான மோசடியும் ஆகும். வரலாற்றின் சில அறிவிப்புகளில் உடன்படிக்கையின் வாசகத்தில் ரஜுல் (ஆண்கள்) எனும் சொல் குறிப்பிடப்படவில்லை; மாறாக பொதுவான சொல்தான் குறிப்பிடபட்டுள்ளது. அது ஆண், பெண் இருவரையும் குறிக்கும் என்று கூறப்படும் என்றால் அதற்கான பதில்,

முதல் விஷயம், வலுவான அறிவிப்புகளுக்கே முன்னுரிமை இருப்பதாக நாம் கருதுவோம். சஹீஹானா அறிவிப்புகளில் ரஜுல் (ஆண்) என்ற சொல் வரும்போது அந்த சொல்லையே சரியானதாகக் கருத வேண்டியது அவசியம் ஆகும். அதுமட்டுமின்றி, வரலாற்று அறிவிப்புகளில் வருகின்ற சொற்களைப் பார்க்கும்போது அவை நாம் எடுத்துரைத்த விளக்கத்திற்கு வலு சேர்ப்பத்தையும் காண முடிகிறது. உதாரணமாக, மிகப் பிரபல்யமான, மிகவும் அறியப்படுகின்ற வரலாற்று நூலான சீரத் இப்னு ஹஷாமில் 'ஆண்' என்ற சொல் வெளிப்படையாக எடுத்துரைக்கப்படவில்லை என்றாலும் அந்த வாக்கியத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை ஆண்களுக்கான சொற்றொடரும், ஆண்களுக்கான குறிச்சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளதை காண முடிகிறது. ஆகவே, உடன்படிக்கை எந்த மொழியில் எழுதப்பட்டுள்ளதோ அதன் அடிப்படையை கருத்தில் கொண்டு பார்க்கும்போது அதன் வாக்கியத்தில் கூறப்பட்ட சொல் ஆண்களை மட்டுமே குறிக்கும்; ஆண்கள் பெண்கள் இருவரையும் குறிக்காது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

இரண்டாவது ஆட்சேபனை, அபூபசீர் அவர்களின் சம்பவத்துடன் தொடர்புடையது ஆகும். ஆனால் சிந்தித்தும் பார்த்தால் இந்த ஆட்சேபனையும் முற்றிலும் அற்பமானதும் பலவீனமானதும் ஆகும் என்று தெரியவருகிறது. மக்கத்து காஃபிர்களில் இருந்து எந்த நபர், அதாவது எந்த ஆண் மதீனாவுக்கு தப்பி வந்தாலும் அவர் முஸ்லிமாக இருந்தாலும் அவருக்கு மதீனாவில் புகலிடம் கொடுக்கப்படாது; அவர் திரும்ப அனுப்பி வைக்கப்படுவார் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் உடன்படிக்கை செய்திருந்தார்கள். ஆனால் கேள்வி என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த உடன்படிக்கைக்கு எதிராக நடந்து கொண்டார்களா என்பதாகும். ஒருபோதும் கிடையாது! அன்னார் அந்த ஒப்பந்தத்தை எந்த அளவுக்கு முழுமையாகவும், மகத்தான முறையிலும் பேணி நடந்தார்கள் என்றால் அதற்கு ஒப்பான ஒரு முன்மாதிரியை உலகத்தால் எடுத்துக் காட்ட இயலாது!

சிந்தித்து பாருங்கள்! அபூபசீர் இஸ்லாத்தின் உண்மையை ஏற்றுக்கொண்டு மக்காவிலிருந்து தப்பி ஓடி மதீனாவை வந்தடைந்தார்கள். ஆனால் அவருடைய அநியாயக்கார உறவினர்கள் அவருக்குப் பின்னாலேயே வந்தடைந்தார்கள். பலவந்தமாக அவரை திரும்ப அழைத்துச் செல்ல விரும்பினார்கள். இரு தரப்பினரும் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். அபூ பஸீர் அவர்கள் மெல்லிய குரலிலும் அச்சமுற்ற தொனியிலும், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இறைவன் எனக்கு இஸ்லாம்

எனும் அருளை வழங்கியுள்ளான். நான் மக்காவுக்கு திரும்பிச் செல்வதால் எப்படிப்பட்ட துன்பமான, ஆபத்தான வாழ்க்கையை எதிர்கொள்ள நேரும் என்பதை தாங்கள் அறிவீர்கள்! இறைவனுக்காக என்னை திருப்பி அனுப்பாதீர்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால் இதற்கெதிராக அபூ பஸீர் அவர்களின் உறவினர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒப்பந்தத்தை நினைவூட்டி அபூ பஸீர் அவர்களை திருப்பி அனுப்புமாறு கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பெரும் துயரம் ஏற்பட்ட போதிலும் அன்னார் அமானிதம் மற்றும் நம்பிக்கையை முழுமையாக கருத்தில் கொண்டார்கள். அபூ பஸீரே! நாம் அவர்களுக்கு வாக்குறுதி கொடுத்திருப்பதையும், நமது மார்க்கத்தில் வாக்கு மீறுதல் ஆகுமானதன்று என்பதையும் தாங்கள் அறிவீர்கள். தாங்கள் அந்த மக்களுடன் சென்று விடுங்கள். தாங்கள் பொறுமையுடனும், உறுதியுடனும் இஸ்லாத்தில் நிலைபெற்றிருந்தால் இறைவன் தங்களுக்காகவும், தங்களைப் போன்ற பிற ஆதரவற்ற முஸ்லிம்களுக்காகவும் அவனே இரட்சிப்பிற்கான வழியை திறந்து வைப்பான் என்று கூறினார்கள். நபியவர்களின் இந்த வழிகாட்டலைக் கேட்ட அபூ பஸீர் அவர்கள் மக்காவாசிகளுடன் திரும்பிச்சென்று விட்டார்கள். அவர்கள் மதீனாவை விட்டு சென்ற பிறகு நிகழ்ந்த சம்பவங்களை எடுத்துக் காட்டி பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை செய்வது முற்றிலும் தவறாகும். ஏனென்றால், மக்காவிலிருந்து தப்பி ஓடக்கூடிய நபர் எங்கிருந்தாலும் அவரை மக்காவுக்கு கொண்டு சேர்க்கின்ற பொறுப்பு பெருமானார் (ஸல்) அவர்களை சாரும்; அன்னார் அதற்கு கட்டுப்பட்டவர் ஆவார்கள் என்று கூறும்வகையில் உடன்படிக்கையில் ஏதேனும் நிபந்தனை உள்ளதா என்ன? அந்தோ பரிதாபம்! இஸ்லாத்தின் எதிரிகள் எந்த விஷயத்திலும் இஸ்லாத்துடன் நீதியுடன் நடந்து கொள்ளவில்லை!

உடன்படிக்கையில் இருந்த நிபந்தனை என்னவென்றால், மக்காவைச் சார்ந்த ஒரு முஸ்லிம் தப்பித்து மதீனா வந்துவிட்டால் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த நபரை திரும்பி அனுப்பி வைத்து விடுவார்கள் என்பதாகும். இது தெளிவாக நிரூபிப்பது என்னவென்றால், இந்த நிபந்தனையின் நோக்கமும் இலக்கும் என்னவாக இருந்ததென்றால், அப்படிபட்ட ஒரு நபர் முஸ்லிமாக இருந்தாலும் மதீனாவின் இஸ்லாமிய அரசின் எல்லைக்குள் அவர் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார். அதாவது கொள்கை ரீதியாக அவர் முஸ்லிமாக இருந்தாலும் பெருமானார் (ஸல்) அவர்கள் தம் மதீனத்து அரசுக்குள் அவரை இணைக்க கூடாது என்பதாகும். ஆகவே அவ்வாறான நபர் உடன்படிக்கையின் நிபந்தனைகளின் கீழ் மதீனாவின் இஸ்லாமிய ஆட்சியை விட்டு வெளியேற்றப்பட்ட பிறகு அவர் எங்கிருந்தாலும் பெருமானார் (ஸல்) அவர்கள் அவருக்கு கட்டளையிட்டு அவரை திரும்பி அனுப்பி வைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எவ்வாறு சரியானதாகும்!

உண்மை என்னவென்றால் ஹிஜ்ரத் செய்து வரக்கூடிய எந்த ஒரு முஸ்லிம் ஆணுக்கும் மதீனாவில் புகலிடம் தரக்கூடாது என்று காஃபிர்கள் சார்பாக உடன்படிக்கையில் இணைக்கப்பட்ட இந்த அறிவற்ற நிபந்தனையை இறைவன் அவர்களுக்கே தண்டனையாக ஆக்கி அவர்களைப் பார்த்து, எம்முடைய தூதரோ எந்நிலையிலும் உடன்படிக்கையை பேணி வந்தார். ஆனால் நீங்கள் உங்களது வழியிலேயே முட்களை வைத்து விட்டீர்கள்; உங்களால் உருவாக்கப்பட்ட ஆயுதங்களைக் கொண்டே உங்களுடைய கைகளை வெட்டிக் கொண்டுள்ளீர்கள் என்று கூறினான். மக்காவில் இருந்து எந்தவோர் ஆணும் முஸ்லிமாகி மதீனாவுக்கு சென்றால் அவரை மதீனாவுக்குள் சேர்க்கக் கூடாது; அவர் மதீனாவின் அரசாட்சியை விட்டு வெளியேற்றப்பட்டவராக கருதப்பட வேண்டும் என்று நீங்கள்தான் கூறினீர்கள்! இப்பொழுது அதே நாவைக் கொண்டு, மதீனத்து அரசாட்சியை விட்டு வெளியேற்றப்பட்ட அந்த மக்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டு அவர்கள் மீது தம் அரசாட்சியை நிலைபெறச் செய்து அவர்களை மக்காவுக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்று நீங்கள் கூறுவது முற்றிலும் அறிவீனமான விஷயமாக உள்ளது!

தனியாக புகலிடம் அமைத்துக் கொண்ட அவர்கள் முஸ்லிம்கள் என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது! ஆனால் அரசியல் ரீதியாக அவர்கள் உங்களைச் சார்ந்தவர்கள் கிடையாது என்று அந்த காஃபிர்கள்தான் நிபந்தனை வகுத்தார்கள். அதை அன்னாரும் ஏற்றுக்கொண்டார்கள். (காஃபிர்களே) நீங்களே அந்த மக்களை பெருமானார் (ஸல்) அவர்களின் அரசாட்சியை விட்டு வெளியேற்றி விட்டீர்கள். பிறகு அன்னாரின் மீது ஆட்சேபனை செய்வதற்கு இதில் என்ன உள்ளது?

எவ்வாறிருப்பினும் இது மக்கத்துக் குரைஷியர்களின் சூழ்ச்சியாக இருந்தது. இது அவர்களின் பக்கமே திரும்பியது. பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்வு எந்நிலையிலும் தூயதாக இருந்தது; தூயதாக இருக்கிறது. உடன்படிக்கையின் சொற்களையும் அன்னார் நிறைவேற்றினார்கள். அபூ பஸீர் அவர்களை மக்காவாசிகளின் கையில் ஒப்படைத்தவாறு அவர்களை மதீனாவை விட்டு வெளியேற்றி விட்டார்கள். அதேபோன்று அந்த உடன்படிக்கையின் அசல் நோக்கமாக இருந்த அதன் ஆன்மாவையும் நிறைவேற்றினார்கள். அபூ பஸீர் மற்றும் அவர்களின் தோழர்களை தம் அரசாட்சியின் வட்டத்தை விட்டு வெளியே வைத்து விட்டார்கள். ஆகவே எல்லா வகையிலும் அன்னார் உண்மையாளர்களாக இருந்தார்கள். மக்கத்துக் காஃபிர்கள் தாம் விரித்த வலையில் தாமே சிக்கிக்கொண்டார்கள். இறுதியில் அவர்கள் இழிவடைந்து அன்னாரிடம் வந்து, நாங்கள் இந்த நிபந்தனையை ஒப்பந்தத்தில் இருந்து நீக்கி விடுகிறோம் என்று கூறினார்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:*

நீதியை நிலை நாட்டுவதாக வாதிப்பவர்களின் இந்த இரட்டை வேட நிலைதான் எப்பொழுதுமே உலகில் குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது. தற்காலத்திலும் இதே குழப்பங்கள்தான் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அல்லாஹ் இன்றும் உலகத்திற்கு, குறிப்பாக முஸ்லிம்களுக்கு அறிவை வழங்குவானாக! தஜ்ஜாலிய குழப்பங்களில் இருந்தும் காப்பாற்றுவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)